TAMIL NADU LEGISLATURE LIBRARY
அக் 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

காஞ்சி வரதராஜப்பெருமாள் ஆலயத் திருப்பணி.

*வினா 504—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சி வரதராஜப் பெருமாள் ஆலயத் திருப்பணிக்காக அரசு நிதி ஏதேனும் வழங்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம். 1976-77 ஆம் ஆண்டில் அரசு மானியம் ரூ. 20,000 வழங்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த காஞ்சி வரதராஜ பெருமாள் நல்ல வசதி படைத்தவர் தானே, அப்படியிருக்கும் போது இவ்வளவு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கு என்ன காரணம் ? தனியாக இந்தத் தொகை கொடுத்துத்தான் ஆக வேண்டுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் நிர்வாகம் சென்னை உயர் நீதிமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தின்படி நிர்வகிக்கப் பட்டு வருகிறது. அறநிலையத் துறையினால் நியமிக்கப்பட்டும் செயல் அலுவலரே தற்போது நிர்வாக அறங்காவலராக இருந்து வருகிறார். தாததேசிக திரு வம்சத்தைச் சேர்ந்த தாதாச் சாரியார் என்ற வகுப்பைச் சேர்ந்த கிழக்குக் கிளையில் இருந்து

ஒருவரும் மேற்குக் கிளையிலிருந்து ஒருவரும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களால் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந் தெடுக்கப்பட்டு, கௌரவ அறங்காவலர்களாக பதவி வகித்து வரு கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அறங்காவலர்களுடன் நிர்வாக அதிகாரியும் சேர்ந்து அறங்காவலர் குழுவாகக் கருதப் பட்டு, நிர்வாக அதிகாரி, நிர்வாக அறங்காவலராக பணியாற்றி வருகிறார். 1386-ம் பசலி ஆண்டில் இவ்வாலயத்தின் வருமானம் ரூ. 3,17,028 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் திருப்பணிக் காக மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,14,000 அதாவது மேற்கு ராஜ கோபுரத் திருப்பணிக்காக ரூ. 3,00,000-க்கும் மேலும் கோபுர வாயில்கள் செப்பனிட ரூ. 14,000-க்குமான மதிப்பீட்டுத் தொகை இந்து சமய அறநிலைய ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையில் 1976-77-ல் அரசு மானிய மாக ரூ. 20,000 வழங்கப்பட்டுள்ளது. இதுபோக மீதி மதிப் பீட்டுத் தொகையில் ரூ. 1,37,243.60 24—12—1977 வரை நன்கொடையாக வசூலிக்கப்பட்டது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல கோயில்களில் சிலைகள் திருட்டுப் போயிருக்கின்றன. இந்த காஞ்சி வரதராஜபெருமாள் கோயிலில் கடந்த ஆண்டுகளில் ஏதேனும் சிலைகள் திருட்டுப் போயினவா? அப்படியென்றால் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கோவில் திருப்பணியைப் பற்றியது, கேட்கப்படுகின்ற கேள்வி மூலக்கேள்விக்கு ஒட்டிய தாக இருக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, காஞ்சியிலே காமாட்சி, காசியிலே விசாலாட்சி, மதுரையிலே மீனாட்சி, நாகை யிலே நீலாயதாட்சி இப்படி பெயர்பெற்ற ஸ்தலங்களில் காஞ்சியும் ஒன்று. இந்த ஆலயங்களுக்கு திருப்பணி செய்வதற்காக நிதி ஒதுக்குகின்ற நேரத்தில், அது மகிழ்ச்சிக்குரியதுதான். அதே நேரத்தில் இந்தக் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களை இதில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்குச் சொந்தமாக்கு வதற்கு அரசிடம் ஏதாவது குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுடைய யோசனையைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

Dispensary to Konapet Village.

* *Q.* 505—Thiru N. SUNDARARAJ : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Government dispensary at Konapet village in Tirumayam taluk in Pudukkottai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: (அ) ஆம்.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டமாக இச்செயற்குறிப்பைச் செயல்படுத்துவது, அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அந்த அரசு மருந்தகத்தைக் கட்டுவதற்கு, ஆரம்பிப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் 50,000 ரூபாய் அரசாங்கத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படி ஒப்படைக்கப்பட்டு சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகியும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிற காரணத்தினால், உடனடியாக இந்த ஆண்டாவது அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் எற்கனவே என்னுடைய பதிலில் தெரிவித்திருக்கிறேன். 1978-79 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டமாக இச்செயற்குறிப்பு செயல்பட அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களுடைய கேள்விக்கு நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களாகப் பதில் அளித்து வருகிறார். இது தற்காலிக ஏற்பாடா? அல்லது நிரந்தர ஏற்பாடா?